தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தில் இன்று மழைக்கு வாய்ப்பு

தமிழகத்தின் தென் கடலோர மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது:

லட்சத் தீவுகளுக்கு அருகில் நிலவி வந்த வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி மேற்கு நோக்கி நகர்ந்துள்ளது. இதன் காரணமாக தென் தமிழகத்தின் சில இடங்களில் செவ்வாய்க்கிழமை மிதமான மழை பெய்யும். வட தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்யும். மேலும் அந்தமான் தீவுகளுக்கு அருகில் ஏற்பட்ட வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி அதே இடத்தில் நீடிக்கிறது. இந்த சுழற்சி, இன்னும் ஓரிரு நாள்களில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறும் வாய்ப்புள்ளது. எனவே, தமிழகத்தில் தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்றனர் அதிகாரிகள். திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணிநேர நிலவரப்படி பாம்பன், கழுகுமலை, ராமநாதபுரம் ஆகிய இடங்களில் மழை பெய்துள்ளது.

### நெல்விதைகள், இடு பொருள்கள் போதுமான அளவு இருப்பு உள்ளன: வேளாண் அதிகாரி தகவல்

விவசாயிகளுக்கு தேவையான சான்று பெற்ற நெல் விதைகள், இடுபொருள்கள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டிருப்பதாக வேளாண்மை உதவி இயக்குநர் ஆர். ராமசாமி பாண்டியன் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். அவரது செய்திக் குறிப்பு வருமாறு: வைகை அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பகுதியான

ராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. ராமநாதபுரம் பெரிய கண்மாய் மூலம் தொருவளூர், கவரங்குளம், பாப்பாகுடி, சூரன்கோட்டை, முதுனாள், களத்தாவூர், அச்சுந்தன்வயல், கூரியூர், புத்தேந்தல் மற்றும் புல்லங்குடி ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன. இத்தண்ணீரைப் பயன்படுத்தி விவசாயிகள் நெல்நாற்று நடுவதற்கு தேவையான பிபிடி 5204 சான்று பெற்ற நெல் விதைகள் போதிய அளவு ராமநாதபுரம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நெல் விதை நேர்த்திக்கான சூடோமோனாஸ் மற்றும் அசோஸ்பைரில்லம் போன்ற உயிர் உரங்களும் இருப்பு வைக்கப் பட்டுள்ளன. ராமநாதபுரம் பெரிய கண்மாய் பாசன ஆயக்கட்டுப் பகுதியில் காணப்படும் நுண்சத்துக்களின் குறைபாட்டினை சீர்படுத்துவதற்கு தேவையான நெல் நுண்ணூட்ட உரங்கள் 50 சதவிகிதம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்க போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இந்த இடுபொருள்களை விவசாயிகள் வாங்கி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவசாயிகள் திருந்திய நெல்சாகுபடி முறைகளைக் கையாண்டு நீரை சேமிப்பதோடு மட்டுமில்லாமல் அதிக மகசூலையும் பெறலாம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>100 பேருக்கு விலையில்லா பசுக்கள் அளிப்பு</u>

நாகை மாவட்டம், திருமருகல் ஒன்றியம், கொங்கராயநல்லூர் மற்றும் பில்லாளி ஊராட்சிகளில் தலா 50 பயனாளிகளுக்கு ரூ. 34 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா கறவைப் பசுக்களை மாநில மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ. ஜெயபால் ஞாயிற்றுக்கிழமை வழங்கினார். கால்நடை பராமரிப்புத் துறை சார்பிலான பசுக்களை பயனாளிகளுக்கு வழங்கி அமைச்சர் பேசியது: கிராமங்களில் வாழும் ஏழைப் பெண்கள் பொருளாதாரத்தில் மேம்படவே விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கப்படுகின்றன. அவற்றை நன்கு பராமரித்து வந்தால், 2

ஆண்டுகளில் பெரிய அளவிலான பொருளாதார நிலையை எட்ட முடியும் என்றார். நிகழ்ச்சிக்கு ஆட்சியர் து. முனுசாமி தலைமை வகித்தார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. பெஞ்சமின் பாபு, வருவாய் கோட்டாட்சியர் அ. சிவப்பிரியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 23 டன் சின்ன வெங்காயம் ரூ. 4 லட்சத்திற்கு ஏலம்

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிக்குளத்தில் உள்ள வெங்காய வணிக வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திறந்தமுறை ஏலத்தில் 23 டன் சின்ன வெங்காயம் ரூ. 4 லட்சத்திற்கு விற்பனையானது. செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் வேளாண் விற்பனை, வேளாண் வணிகத் துறை முலம் திறந்த முறையில் நடத்தப்பட்ட ஏலத்தில் வாலையூர், மேட்டுப்பாளையம், எசனை, சிறுவயலூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, நாட்டார்மங்கலம், வடக்குமாதவி, சிறுவாச்சூர், செட்டிக்குளம், நெய்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 101 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தை கொண்டு வந்து விற்பனை செய்தனர். இதில் பங்கேற்ற 17 வியாபாரிகள், 348 மூட்டை (23,469 கிலோ) வெங்காயத்தை ஏலத்தில் எடுத்தனர். புதிய வெங்காயம் அதிகபட்சமாக 1 கிலோ 28 ரூபாய்க்கும், சராசரியாக ஒரு கிலோ 17 ரூபாய்க்கும் விற்பனையானது. அதன்படி, 23 டன் சின்ன வெங்காயம் ரூ. 4,03,096-க்கு விற்பனையானது.

## திருவாரூரில் நவ. 27-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவாரூர் ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 27-ம் தேதி விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெறவுள்ளது. விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது கோரிக்கைகளை தெரிவித்து பயன் பெறலாம் என ஆட்சியர் எம். மதிவாணன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் உயருகிறது

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக திறந்துவிடப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டதையடுத்து, அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் மழை பெய்து வருவதால், கடந்த சில நாள்களாக மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்காக திறந்துவிடப்படும் நீரின் அளவு நொடிக்கு 2 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது. இந்த நிலையில், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து திங்கள்கிழமை காலை நொடிக்கு 5,848 கன அடியாக இருந்தது. திறந்துவிடப்படும் நீரின் அளவைவிட, நீர்வரத்து அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் மெதுவாக உயர்ந்து வருகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 103.30 அடியாகவும், நீர் இருப்பு 69.18 டி.எம்.சி.யாகவும் உள்ளது. கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்காக அணையிலிருந்து நொடிக்கு 700 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. பட்டு வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளை அரசு செய்ய வேண்டும். கர்நாடகத்தில் பட்டு வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளை அரசு செய்ய வேண்டும் என்று, அந்த மாநில ஆளுநர் வஜுபாய் வாலா தெரிவித்தார். பெங்களூருவில் திங்கள்கிழமை பட்டு வளர்ச்சி குறித்து கலந்தாய்வு நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்து அவர் பேசியது: பட்டுக்கு பெயர் போன மாநிலமாக கர்நாடக விளங்குகிறது. எனவே, பட்டு வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளை அரசு செய்ய வேண்டும். பட்டு விவசாயத்துக்கு உதவுவதன் மூலம் பட்டு விவசாயத்தை பெரும்பான்மை யாக செய்து வரும் பழங்குடியின மக்களின் வளர்ச்சிக்கும் உதவுவது போலாகும். அதுமட்டுமன்றி, பட்டுத் துறையால் பலருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும். முன்பெல்லாம் பட்டு வளர்ப்பில் பலரும் ஆர்வமாக இருந்தனர். ஆனால், இப்போது பருத்தி உள்ளிட்டவைகளை வளர்ப்பதில்

ஆர்வமில்லை. பட்டு வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகளை மக்களுக்கு விளக்கி, விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். நமது பாரம்பரியத்தின் அடையாளமாக பட்டு விளங்கி வருகிறது. எனவே, அந்தத் துறையை மேம்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். முன்னதாக, பட்டு வளர்ச்சித் துறையில் சாதனை செய்தவர்களுக்கு அவர் விருது, சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

**<u>வேளாண் வளத்தை விளக்கும் தமிழக அரங்கு!</u>**

நாட்டில் விளை நிலங்கள்; விலை நிலங்களாக வேகமாக மாறி வரும் இன்றைய சூழ்நிலையில், நாட்டின் வேளாண் வளத்தை விளக்கும் வகையில் இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள தமிழக அரங்கு அனைவரையும் வெகுவாக கவர்ந்து வருகிறது. விவசாயத்தை பாரம்பரிய மாக கொண்ட தமிழகத்தின் வேளாண் முறையை பறைசாற்றும் வகையில் அமைந்துள்ள தமிழக அரங்கை வட மாநிலத்தவர்கள் ஆர்வத்துடன் பார்த்துச் செல்கின்றனர். இந்திய வர்த்தக மேம்பாட்டு நிறுவனம் சார்பில் பிரகதி மைதானத்தில் கடந்த 14-ஆம் தேதி தொடங்கிய "மகளிர் தொழில் முனைவோர்' தலைப்பிலான 34-ஆவது இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 27-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இதையொட்டி, மாநிலங்களுக்கான பிரத்யேக தின கொண்டாட்டங்கள், கலை - கலாசார நிகழ்ச்சிகள், சாஸ்திரிய இசை, நாட்டியம், தெருமுனை நாடகம் ஆகியவை நடைபெற்று வருகின்றன. தமிழக அரங்கு: தமிழக அரங்கின் முகப்பும், சுற்றுப்புறமும் கோயிலை ஒத்திருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அரங்குக்குள் நுழைந்தவுடன் தமிழக கலாசார உடையணிந்த பெண் சிலை அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்கிறது. இதைத் தாண்டி நுழைய முற்படுகையில், குத்து விளக்குகள் சூழ வைக்கப்பட்டுள்ள நடராஜர் சிலை பக்தி பரவசத்தை ஏற்படுத்துகிறது. தமிழக அரசின் பல்துறை திட்டங்கள் தொடக்க விழாவில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் பிரமாண்ட அளவில்

வைக்கப்பட்டு, திட்டங்கள் நினைவு கூறப்பட்டுள்ளன. நாட்டின் பழைமையான மாநகராட்சிகளில் ஒன்றான சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தின் மாதிரி வடிவம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து, ஆசியாவின் நீளமான கடற்கரை என அறியப்படும் மெரினாவும் தமிழ்நாடு தலைமைச் செயலகம், சட்டப்பேரவை, நேப்பியர் பாலம், அண்ணா நினைவிடம், எம்ஜிஆர் நினைவிடம், கடற்கரை சாலை ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கடற்கரை சாலையில் சிறிய வாகனங்கள் செல்லும் வகையில் முப்பரிமாண மாதிரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழக அரங்குக்கு வரும் பார்வையாளர்கள் ரிப்பன் கட்டிடம், மெரினா கடற்கரை ஆகியவற்றை போட்டிபோட்டு செல்போன்களில் படம் பிடிக்கின்றனர். தஞ்சாவூர் ஓவியங்கள்: இதைத் தொடர்ந்து, அரங்கில் வைக்கப்பட்டுள்ள தஞ்சாவூர் ஓவியங்கள் காண்போரை மீண்டும் பார்க்கத் தூண்டுகின்றன. தஞ்சாவூர் ஓவியங்கள் குறித்து கலைஞர் ஆனந்த் கூறுகையில், "விநாயகர், கிருஷ்ணர், லட்சுமி, பாலாஜி ஆகிய கடவுள்களின் உருவங்களை ஒவியங்களாக வரைந்து அதில் ஆபரண வேலைப்பாடுடன் விற்பனை செய்கிறோம். எங்களிடம் ரூ. 1500 முதல் ரூ. 5 லட்சம்வரை தஞ்சாவூர் ஓவியங்கள் விற்பனைக்கு கிடைக்கிறது. இந்த ஒவியங்களைப் பொதுவாக தென்னியந்தியர்களைப் போல தில்லிவாசிகளும் வாங்கிச் செல்கின்றனர்' என்றார். சுற்றுலா: தமிழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாத் தலங்களை காணொளியில் காட்சிப்படுத்தியுள்ளனர். தஞ்சை பெரிய கோயில், மேகமலை, கன்னியாகுமரி, முதுமலை, ஸ்ரீரங்கம், ராமேசுவரம், ஒகேனக்கல், மாமல்லபுரம் ஆகிய சுற்றுலாத் தளங்களில் பிரமாண்ட புகைப்படங்கள் காட்சிப்படுத்தியுள்ளனர். இது குறித்து, உதவி சுற்றுலா அலுவலர் சங்கர் கூறுகையில், "தமிழக சுற்றுலா தலங்கள் குறித்து மக்கள் ஆவலுடன் தகவல் கையேடுகளை பெற்றுச் செல்கின்றனர்' என்றார்.

வேளாண்: குறைந்துவரும் சிறுதானியங்கள் உற்பத்தி குறித்து விழிப்பு ஏற்படுத்தி அவற்றின் உற்பத்தியை பெருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் வகையில், சிறு தானியங்கள் வேளாண் அரங்கு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் அலுவலர் டி. ஆதிநாதன் கூறுகையில், "நாட்டிலேயே வேளாண் உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் தொடர்ந்து முன்னேற்ற பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையில், வேளாண் துறையில் சாதனைகள் படைத்து வரும் தமிழகத்துக்கு பல்வேறு விருதுகள் கிடைத்து வருகின்றன. 2014-15-ஆம் ஆண்டில் 145 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியத்தை உற்பத்தி செய்வதென இலக்கு நிர்ணியிக்கப்பட்டுள்ளது. இதையொட்டிதான், சிறுதானியங்களைக் கொண்டு அரங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தவிர நெட்டை, குட்டை, ஒட்டு வகை தென்னை ரகங்களும் காட்சிப்படுத்தியுள்ளோம். பாரம்பரிய உணவு தானியங்களான ராகி, குதிரைவாலி, கம்பு, திணை, சோளம் ஆகியவற்றை காட்சிப்படுத்தியுள்ளோம்' என்றார். மற்றொரு வேளாண் அலுவலர் பி. பாலகிருஷ்ணன் கூறுகையில், "பாசிப்பயறு, உளுந்து, பீன்ஸ். திணை, கம்பு, கேழ்வரகு, பட்டாணி, எள்ளு, மக்காச்சோளம், தட்டைப் பயிறு ஆகியவற்றைக் கொண்டு பிரமாண்ட கும்பம், குத்துவிளக்குகள், பெண் ஓட்டிச் செல்லும் ரதம் ஆகியவற்றை அமைத்துள்ளோம். இதை பார்வையாளர்கள் கண்டு ரசித்து செல்கின்றனர் என்றார். தோட்டக்கலை: தோட்டக்கலைத் துறை அரங்கு குறித்து வேளாண் துணை அலுவலர் பி. கார்த்திகேயன் கூறுகையில், "தென்னை சாகுபடி செய்த விவசாயிகளுக்கு உதவும் வகையில் ஊடு பயிராக கோகோ சாகுபடி செய்ய வலியுறுத்தியும், மாநகரங்களில் மாடி காய்கறி தோட்டம் அமைப்பது குறித்தும் இந்த அரங்கில் தகவல்கள் அளிக்கப்பட்டு வருகின்றன' என்றார். விற்பனை

அரங்கு: வேளாண்மையில் விற்பனை அரங்கு குறித்து வேளாண் அலுவலர் எஸ். ராஜன் கூறுகையில், "வேளாண்மை செய்தால் மட்டும் போதாது, விளைப் பொருள்களை சந்தைப்படுத்தத் தெரிந்திருத்தல் அவசியம் எனக் கூறி, சந்தைப்படுத்தும் உத்திகளை முப்பரிமாண மாதிரிகளில் தோட்டம், விவசாயிகள், டிராக்டர், சந்தை, குளிர்சாதன கிடங்கு, சந்தைப்படுத்துதல் ஆகியவற்றை விளக்கியுள்ளோம்' என்றார். வேளாண் ஏற்றுமதி குறித்து வேளாண் அலுவலர் எஸ். சாக்ரடீஸ் கூறுகையில், "முப்பரிமாண மாதிரிகைகளைக் கொண்டு மாம்பழக் கூழ் தயாரிப்பு ஆலை, அவற்றை ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றை தத்ரூபமாக காட்சிப்படுத்தப் பட்டு விளக்கம் அளித்து வருகிறோம்' என்றார். தமிழ்நாடு மின்சார வாரியம் அரங்கில் காற்றாலை மின்சாரம், அனல் மின்சார உற்பத்தி நிலையங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டத்தை சேர்ந்த மகளிர் குழுவினரின் குந்தன் ஆபரண நகைகள், வாணியம்பாடியின் தோல் பொருள்களும் அரங்கில் இடம் பெற்றுள்ளன.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நவரை பருவ வேர்க்கடலை பயிரிட விவசாயிகள் தீவிரம்</u>**

உத்திரமேரூர்: வடகிழக்கு பருவ மழை எதிர்பார்த்த அளவிற்கு இதுவரை பொழியாததை தொடர்ந்து, உத்திரமேரூர் பகுதியை சுற்றி உள்ள விவசாயிகள், நவரை பருவ வேர்க்கடலை பயிரிடுவதில், தீவிரம் காட்ட துவங்கி உள்ளனர். வடகிழக்கு பருவ மழை துவங்கி, ஒரு மாதம் முடிவடைந்த நிலையில், உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஏரிகளில், ஒரு ஏரி கூட இதுவரை நிரம்பவில்லை. இதனால், ஏரி பாசனத்தை நம்பி,

நெல் பயிரிட்டால், பாசன வசதி பெற தேவையான தண்ணீர் கிடைக்காது என, விவசாயிகள் கவலையடைந்துஉள்ளனர். இதை தொடர்ந்து, பெருநகர், இளநகர், களியாம்பூண்டி மற்றும் அம்மையப்பநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில், நவரை பருவ வேர்க்கடலை பயிர் செய்வதில், விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து, பெருநகர் விவசாயிகள் கூறுகையில், 'தற்போது பெய்துள்ள மழையின் அளவால், அடுத்து வரும் ஒரு மாதத்திற்கு மேலாக நிலத்தில் ஈரம் இருக்கும். மேலும், பனிக்காலம் துவங்க உள்ளதால், நிலத்தில் ஈர பதத்தை தக்க வைக்க, அது கூடுதல் உதவியாக இருக்கும். எனவே, தற்போதைய கால நிலைக்கு, இப்பகுதியில் நவரை பருவ வேர்க்கடலை பயிரிடுவது, நஷ்டம் ஏற்படாமல் பயனுள்ளதாக இருக்கும்' என்றனர்.

**கூடுதல் வருவாய் ஈட்டித்தரும் கோழிகொண்டை பூ சாகுபடி**

தியாகதுருகம்: தியாகதுருகம் பகுதியில் மலர் சாகுபடி மூலம் விவசாயிகள் வருவாய் ஈட்டி வருகின்றனர். தியாகதுருகம் பகுதியில் உள்ள ஒகையூர், ஈய்யனூர், சித்தலூர், விளக்கூர், பானையங்கால் பகுதி விவசாயிகள் கனகாம்பரம், சாமந்தி, கோழி கொண்டை பூ பயிரிட்டு வருவாய் ஈட்டி வருகின்றனர். இதில் கோழிக்கொண்டை பூ சாகுபடி இப்பகுதியில் அதிகரித்து வருகிறது. பராமரிப்பது, பூக்களை பறிப்பது எளிதாக உள்ளதால் விரும்பி பயிரிடுகின்றனர். கால் ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்தால் தினம் 10 முதல் 15 கிலோ வரை பூ அறுவடை செய்ய முடியும். பயிரிட்ட ஒன்றரை மாதத்தில் இருந்து மலர் பறிக்க முடியும். தொடர்ந்து 5 மாதங்களுக்கு பலன் தருகிறது. அவ்வப்போது நீர்பாய்ச்சி ஊட்டச்சத்து இயற்கை உரங்களை தூவி பராமரித்தாலே நல்ல மகசூலை பெற முடியும். தற்போது இப்பகுதியில் அறுவடை செய்யப்படும் பூக்கள் விருத்தாசலம் பூக்கடைகளுக்கு பஸ்சில் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வகை பூக்கள் மாலை கட்ட

மட்டுமே பயன்படுவதால் விலை வீழ்ச்சியடைந்தாலும் பூக்கடை காரர்களிடம் மட்டுமே விற்க முடியும். கூலியாட்களை வைக்காமல் குடும்ப உறுப்பினர்களே பராமரித்தால் கோழிகொண்டை பூ சாகுபடியில் கூடுதல் லாபம் ஈட்டமுடியும்.

**<u>பருத்தி மகசூலை அதிகரிக்க மருந்து தெளிக்கும் விவசாயிகள்</u>**

தியாகதுருகம்: பருத்தி செடிகளில் பூக்கள் உதிராமல், காய்களை புழு தாக்காமலிருக்க மருந்து தெளிக்கின்றனர். தியாகதுருகம் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மானாவாரி பருத்தி சாகுபடி செய்துள்ளனர். தென் மேற்கு பருவ மழை குறித்த நேரத்தில் பெய்யாததால் விதைப்பு பணிகள் தாமதமானது. கிடைத்த மழை ஈரத்தை கொண்டு விதைப்பு பணிகளை முடித்தனர். வடகிழக்கு பருவமழை கைகொடுத்ததால் செடிகள் ஊட்டமாக வளர்ந்துள்ளது. செடிகளில் அதிக பூக்கள் உள்ளன. இதிலிருந்து காய்கள் உருவாகும் பருவத்தில் உள்ளது. இத்தருணத்தில் பூக்கள் உதிர்ந்து போகாமலும், காய்கள் உருவாகி பருத்து வளரும் வகையில் மருந்து தெளிக்கின்றனர். இதன் மூலம் காய்களை புழுக்கள் தாக்கி சேதப்படுத்துவது தடுக்கப்படுகிறது. வேளாண் துறை சார்பில் மானிய விலையில் வழங்கும் விசை தெளிப்பான் இயந்திரத்தின் உதவியோடு மருந்து தெளித்து பராமரிக்கின் றனர். இனி வரும் ஒரு மாத காலம் மகசூலை அதிகரிக்க செய்யும் முக்கிய தருணமாகும். இப்பருவத்தில் கன மழையின்றி, பனிப்பொழிவு குறைவாக இருந்தால் கடந்த ஆண்டை விட கூடுலாக பஞ்சு மகசூல் கிடைத்து லாபம் ஈட்ட முடியும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

**<u>சந்தைபடுத்தும் யுத்தி இருந்தால் வெற்றி; வேளாண் பல்கலை இயக்குனர் தகவல்</u>**

பனமரத்துப்பட்டி : "விவசாயிகள் சந்தைபடுத்தும் யுத்தி தெரிந்தால் மட்டுமே ஜெயிக்க முடியும்' என, சந்தியூரில் நடந்த வேளாண் தொழில்நுட்ப வார விழாவில், தமிழ்நாடு வேளாண் பல்கலை இயக்குனர் பொன்னுசாமி

பேசினார். சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், வேளாண் தொழில்நுட்ப வார விழா நடந்தது. திட்ட ஒருங்கிணைப்பாளர் மகேந்திரகுமார் வரவேற்றார். வேளாண் கருத்து காட்சியை திறந்து வைத்து, தமிழ்நாடு வேளாண் பல்கலை இயக்குனர் பொன்னுசாமி பேசியதாவது: விவசாயிகள் குழுவாக செயல்பட்டால், வேளாண்மை துறையில் நிச்சயம் வெற்றி பெற முடியும். இதற்கு, மாற்றம் அவசியம், நமது எண்ணத்தில் மாற்றம், சொல்லில் மாற்றம், செயலில் மற்றம் தேவை. ஒரு நாள் வருமானம், வார வருமானம், மாத வருமானம், மூன்று மாத வருமானம், ஆறு மாத வருமானம், ஆண்டு வருமானம் என, வருமானம் வர திட்டமிட வேண்டும்.விவசாயிகள் தங்களுடைய பொருட்களை, நேரடியாக விற்பனை செய்ய வேண்டும். அதற்கு விவசாயிகள் ஒன்று சேர்ந்து, குழுவாக செயல்பட்டால், உற்பத்தி செய்த பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய முடியும்.உற்பத்தி, பதப்படுத்துதல், சந்தைபடுத்துதல் ஆகியவற்றில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டும். சந்தைபடுத்தும் யுத்திகள் தெரிந்தால் மட்டுமே, ஜெயிக்க முடியும். விவசாயிகள், விரிவாக்க அதிகாரிகள்,விஞ்ஞானிகள், வங்கிகள் ஒன்று சேர வேண்டும். விவசாயிகள் ஒவ்வொரு கிராமத்திலும், குழுக்கள் உருவாக்கி, சந்தைக்கு என்ன தேவையோ அதை மட்டும் பயிர் செய்து, தமிழக அரசின் இரண்டாம் பசுமை புரட்சிக்கு வித்திட வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார். வேளாண்மை யில் இரு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம் அடையும் வழி குறித்து, ஏத்தாப்பூர் மரவள்ளி ஆராய்ச்சி நிலைய தலைவர் மாணிக்கம் பேசினார். தாவர பயிர் பாதுகாப்பு, உழவர் உரிமை சட்டத்தின் முக்கியத்துவம், பயிர் பதிவு செய்தல் குறித்து, உதவி பேராசிரியர் ஸ்ரீராம் விளக்கினார். தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் கண்ணன், விவசாய உற்பத்தி

குழு உறுப்பினர் பனமரத்துப்பட்டி சண்முகம், ஏற்காடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் நாகேஸ்வரி ஆகியோர் பங்கேற்றனர்.

## நவரை பட்டத்துக்கு நாற்று உற்பத்தி துவக்கம் : 10 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி

கிருஷ்ணகிரி: நவரை பட்டத்தில், 10 ஆயிரம் ஹெக்டேரில், நெல் சாகுபடி செய்ய, விவசாயிகள் நாற்றுகளை விடும் பணியை, ஆர்வத்துடன் துவக்கியுள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கே.ஆர்.பி., அணை, கெலவரப்பள்ளி அணை, சின்னாறு அணை, பாரூர் ஏரி உள்ளிட்ட பாசன பகுதியில், முதல்போக நெல் சாகுபடியான சம்பா பருவத்தில், 20 ஆயிரம் ஹெக்டேரில், நெல் சாகுபடி செய்யப்பட்டது. போதிய மழை மற்றும் தண்ணீர் வசதி காரணமாக, ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக, ஆறு டன் நெல் அறுவடை செய்யப்பட்டது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மாவட்டத்தில், தற்போது, இரண்டாம் போக நெல் சாகுபடியான நவரை பட்டத்தில், நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் நெல் நாற்றுகளை விட துங்கியுள்ளனர். குறிப்பாக இப்போகத்தில், 120 நாட்களில் அறுவடைக்கு வரும் ஏ.டி.டி., 39 மற்றும் ஏ.டி.டி.,43, பையூர்,1, வெள்ளை பொன்னி ஆகிய ரகங்களை, வேளாண் துறையினரிடம் இருந்து வாங்கி, விவசாயிகள் அதிக அளவில் நாற்றுவிட்டுள்ளனர். மேலும், தனியார் மூலம் விற்பனை செய்யப்படும் வீரிய ஒட்டு ரகங்களாக அன்கூர் சோனா, சோனா முசிறி போன்ற சன்னரக நெல் ரகங்களையும், விவசாயிகள் நாற்று விட்டுள்ளனர். இரண்டாம் போக நெல் சாகுபடிக்கும், மாவட்டத்தில் உள்ள நீர் ஆதாரங்களில் போதிய அளவு தண்ணீர் இருப்பு உள்ளதால், நல்ல முறையில் அறுவடை செய்ய முடியும் என்று, விவசாயிகள் நம்பியுள்ளனர்.

இது குறித்து, வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இரண்டாம் போக நவரை பட்டத்தில் விவசாயிகள் ஆர்வமுடன் நெல் சாகுபடி செய்ய, நாற்றுகளை தற்போது விட்டு வருகின்றனர். நவரை பட்ட நெல் சாகுபடியில், விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய உர நிர்வாகம் மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியவற்றில், புதிய தொழில் நுட்பங்களை கையாள, விவசாயிகளுக்கு கிராமங்கள் தோறும் பயிற்சி நடத்த வேளாண் துறை முடிவு செய்துள்ளது. இதற்காக, கிராமங்களில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், 50 பேரை, ஒரு குழுக்களாக சேர்த்து, வேளாண்துறை மூலம் அவர்கள் வசதிக்கும் பகுதிகளில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். குறிப்பாக, திருந்திய நெல் சாகுபடி குறித்தும், அதில் கடைபிடிக்க வேண்டிய புதிய தொழில் நுட்பங்கள் குறித்தும், விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்படும். விதை நெல்லை பொறுத்தமட்டில், விவசாயிகளுக்கு தேவையான விதை நெல் மாவட்டத்தில், 10 யூனியன்களில் உள்ள வேளாண் துறை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. சில இடங்களில், விவசாயிகள் சன்ன ரக விதை நெல்லை மட்டும் கேட்கிறார்கள். இந்த பருவத்தில், 120 நாளில் அறுவடைக்கு வரும் சன்னரக ஏ.டி.டி.,39 ரகங்களை சாகுபடி செய்தால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. மொத்தம், 10 ஆயிரம் ஹெக்டேரில், இரண்டாம் போக நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வமுடன் உள்ளனர்.

## <u>ரூ.27.60 லட்சம் மதிப்பில் வேளாண் பொருள் விற்பனை</u>

அந்தியூர் : அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், அத்தாணி, கோபி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுப்பாளையம் உட்பட பல

பகுதிகளில் இருந்து, தேங்காய், எள், நிலக்கடலை, மக்காச்சோளம் போன்ற விளை பொருட்களை, விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். தேங்காய், குறைந்த விலையாக, 2 முதல், அதிகப்பட்ச விலையாக, 13.45 ரூபாய் என, 20 ஆயிரம் தேங்காய், 1.60 லட்சம் ரூபாய்க்கும், கொப்பரை தேங்காய், 60 மூட்டைகள், குறைந்த பட்ச விலையாக, 69.65 முதல், 78.25 ரூபாய் வரை, 1.50 லட்சம் ரூபாய்க்கும், வெள்ளை ரக எள், 300 மூட்டை கிலோ ஒன்றுக்கு, 74.89 முதல், 98.41 ரூபாய் என, 18 லட்சம் ரூபாய்க்கும், மக்காச்சோளம், 48 மூட்டைகள் கிலோ ஒன்று, 10.72 முதல், 11.24 வரை, 50 ஆயிரம் ரூபாய்க்கும் ஏலம் போனது.கடந்த, புதன்கிழமை நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 520 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது. பச்சை கிலோ ஒன்று, 14.69 முதல், 21 ரூபாய் வரையும், காய்ந்தது, 35.9 முதல், 52 வரை, 6 லட்சம் ரூபாய் என மொத்தம், 27.60 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது, என, விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்

## ஒயின் தயாரிக்க பயன்படும் 'லக்கோட்' பழம்; குன்னூர் பண்ணையில் சீசன் துவக்கம்

குன்னூர் : 'ஒயின்' தயாரிக்க பயன்படும் 'லக்கோட்' பழ சீசன், குன்னூர் அரசு தோட்டக்கலை பழப்பண்ணையில் துவங்கியுள்ளது. நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு தோட்டக்கலை பழப்பண்ணையில், 'லக்கோட்' பழங்கள் அதிகளவில் விளைந்துள்ளன. குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதி தனியார் பங்களாக்களிலும் இந்த வகை மரங்கள் காணப்படுகின்றன. தோட்டக் கலை ஆராய்ச்சியாளர் டாக்டர் ராம்சுந்தர் கூறியதாவது: 'எரியோபோட்ரியா ஜப்பானிக்கா' என அழைக்கப்படும் இந்த பழங்கள், 'ரோஸ்யேசியே' தாவர வகையை சார்ந்தவை. மத்திய சீன பகுதியை பூர்வீகமாக கொண்ட இவ்வகை பழங்கள், ஜப்பான், ஆஸ்திரேலியா, பெர்முடா, சிலி, கென்யா

தென்னாப்பிரிக்கா உட்பட பல்வேறு நாடுகளிலும் விளைகின்றன.இந்த பழம் வளர குன்னூரின் காலநிலை ஏற்றதாக உள்ளது. பீச், மாம்பழம், சிட்ரஸ் ஆகிய பழங்களின் சுவையை ஒருங்கே கொண்டது இந்த பழம். இதற்கு, 'சைனீஸ் பழம், ஜப்பானீஸ் பழம்' என்ற வேறு பெயர்களும் உண்டு. ஜாம் மற்றும் ஒயின் தயாரிக்க அதிகளவில் பயன்படுகிறது.நார்ச்சத்து கொண்ட இந்த பழங்கள், சீனாவில் தொண்டை கரகரப்புக்கு மருந்து தயாரிக்கவும், ஜப்பானில் தோல் வியாதிகளை குணப்படுத்தும் மருந்து தயாரிக்கவும் பயன்படுத்துகின்றனர். இப்பழத்தில் 'வைட்டமின் ஏ' அதிகமாக உள்ளது. குன்னூர் பழ பண்ணையில் விற்கப்படும் இதன் நாற்றுகளை, மக்கள் வாங்கி தங்கள் தோட்டங்களில் வளர்க்கலாம். இவ்வாறு, அவர் கூறினார்.

## <u>விவசாயிகளுக்குதரமான விதை</u>

கோத்தகிரி : கோத்தகிரியில் ஆதிவாசி விவசாயிகளுக்கு விதைகள் வழங்கும் விழா நடந்தது.ஆதிவாசி மக்களின் மேம்பாட்டுக்காக, பல்வேறு நடவடிக்கை களை எடுத்துவரும் ஐலெண்ட் டிரஸ்ட் சார்பில், அதன் நிர்வாக செயலர் அல்போன்ஸ் ராஜ் முன்னிலையில், 30 விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்கப்பட்டது."ஆதிவாசி மக்கள் தங்களது பாரம்பரிய உணவு வகைகளை பயரிட்டு, உற்பத்தி செய்யவேண்டும். விவசாய குழுக்கள் ஒருங்கிணைந்து உணவு உற்பத்தியை பெருக்கவேண்டும்' என, நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது. இதில், ஐலெண்ட் டிரஸ்ட் நிர்வாகிகள் பிரேம், கிரிபாளினி உட்பட பலர் பங்கேற்றனர்.

**<u>நீலகிரியில் குடற்புழு நீக்க சிறப்பு முகாம்; விலையில்லா கால்நடைகளுடன் வரலாம்</u>**

ஊட்டி : நீலகிரி மாவட்டத்தில், விலையில்லா வெள்ளாடுகளுக்கு, குடற்புழு நீக்க முகாம் நடத்தப்பட உள்ளது. இதுகுறித்து, நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழகத்தில், வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் பெண்களின் முன்னேற்றத்திற்காக, மாநில அரசின் சார்பில், வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. பயனாளிகள், தங்கள் கால்நடைகளை நன்கு பராமரிக்க வேண்டும் என, அரசு அறிவுறுத்தியுள்ளது. பயனாளிகளை ஊக்கப்படுத்தும் வகையில், கடந்த இரு ஆண்டுகளில், கால்நடைகளை சிறப்பாக பராமரித்தவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தி திறனை அதிகரிக்கவும், வெள்ளாடுகள், செம்மறியாடுகளின் எடையை அதிகரிக்க செய்யும் நோக்கிலும், வரும் 28, 29 தேதிகளில், கறவை பசுக்களுக்கு, இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை, ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடத்தப்பட உள்ளது. நீலகிரி மாவட்டத்தில், ஊட்டி ஊராட்சி ஒன்றியத்தில், பாலகொலா, ஆணைக்கட்டி (எப்பநாடு), மசினகுடி, குன்னூர் ஊராட்சி ஒன்றிய அளவில் பேரட்டி, வண்டிச்சோலை, பர்லியாறு, மேலூர், எடப்பள்ளி, கோத்தகிரி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ஜக்கனாரை, கடினமாலா, கொணவக்கரை, கெங்கரை, கோடநாடு, குஞ்சப்பனை, நடுஹட்டி, கூடலூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சேரங்கோடு, நெலாக்கோட்டை, ஸ்ரீமதுரை ஆகிய கிராமங்களிலும் முகாம் நடத்தப்பட உள்ளது; பயனாளிகள் தவறாமல் பங்கேற்க வேண்டும்.இவ்வாறு, கலெக்டர் சங்கர் கூறியுள்ளார்.

**<u>உள்ளூர் முருங்கை பற்றாக்குறை; பரோடாவிலிருந்து கொள்முதல்</u>**

ஒட்டன்சத்திரம் : உள்ளூர் முருங்கை வரத்து குறையத் தொடங்கியதை தொடர்ந்து பற்றாக்குறையை தவிர்க்க "பரோடா 'முருங்கை ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் விற்பனைக்காக வரவழைக்கப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம், மார்க்கம்பட்டி, தாராபுரம், தேனி மாவட்டம் ஆண்டிபட்டி மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் விளைவிக்கப்பட்ட முருங்கைக்காய் தினமும் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படும். சமீபத்தில் பெய்த மழைகாரணமாக மார்க்கெட்டில் முருங்கை வரத்து குறைந்துள்ளது. பற்றாக்குறை தொடர்ந்ததால் முருங்கை விலை அதிகரித்து கிலோ ரூ.60 க்கு விற்றது. உள்ளூர் பகுதி முருங்கை மழையில் நனைந்து தரம் குறைந்தவை யாக உள்ளது. இந்நிலையில் குஜராத் மாநிலம் பரோடா பகுதியில் முருங்கை விளைச்சல் அமோகமாக உள்ளது. கமிஷன் கடை உரிமையாளர்கள் அங்கிருந்து முருங்கையை கொள்முதல் செய்து லாரி மூலம் இங்கு கொண்டு வந்து விற்கின்றனர். தினமும் 15 டன் பரோடா முருங்கை வரவழைக்கப் படுகிறது. ஒரு கிலோ பரோடா முருங்கைக்காய் ரூ.110 க்கு விற்கப்படுகிறது. கமிஷன் கடை உரிமையாளர் ஹரிகரன் கூறுகையில்," பரோடாவில் கிலோ ரூ.70 க்கும் அதிகமாக விற்கப்படுகிறது. லாரி வாடகையும் சேர்த்து அதற்கு மேல் விற்றால்தான் கட்டுபடியாகும். தேவை அதிகரித்துள்ளதால் அங்கிருந்து கொள்முதல் செய்துள்ளோம்," என்றார்.

**<u>விவசாய பணி மும்முரம்; வாத்து மேய்ச்சல் அதிகரிப்பு</u>**

ஆண்டிபட்டி : பருவ மழை கை கொடுத்துள்ளதால் இந்த ஆண்டு வாத்து முட்டை உற்பத்தி அதிகரிக்கும் என்று உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கண்மாய் மற்றும் ஆற்றுப்பாசன நிலங்களில் அறுவடைக்குப்பிறகு மீண்டும் நடவு செய்வதற்காக நிலங்களில் "தொழி'

அடித்து விவசாயிகள் தயார்படுத்துவர். "தொழி'அடிக்கும் காலங்களில் வயல்களில் தேங்கி நிற்கும் நீரில் நூற்றுக்கணக்கான வாத்துக்களை மேய்ச்சலுக்கு விடுவர். மேய்ச்சலுக்காக வயல்களின் உரிமையாளர்களுக்கு குறிப்பிட்ட தொகையை வாத்து வளர்ப்பவர்கள் கொடுத்து விடுவர். வயல்வெளிகளில் குறிப்பிட்ட இடங்களில் வாத்து முட்டைகள் அன்றாடம் சேகரிக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படும். பாதிப்பு: கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தில் கடும் வறட்சி ஏற்பட்டதால், வாத்துக்களை வயல் வெளிக்கு அனுப்ப முடியாமலும், அவற்றிற்கு தேவையான தீவனம் கொடுக்க முடியாமலும், வாத்து வளர்ப்பவர்கள் பாதிப்படைந்தனர். இந்த ஆண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவ மழையால் தமிழகத்தில் அணைகளின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. பல இடங்களிலும் விவசாயிகள் நெல் நடவுக்கு நிலங்களை தயார்படுத்தி வருகின்றனர். தற்போதுள்ள சூழல் வாத்து வளர்ப்பதற்கு சாதகமாக இருப்பதால், இந்த ஆண்டு வாத்து முட்டை உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. வாத்து வளர்ப்பு மற்றும் முட்டை உற்பத்தியாளர்கள் கூறியதாவது: மேட்டூர் அணையை நம்பி உள்ள பாசனப்பகுதிகளான மாயவரம், மயிலாடுதுறை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, பட்டுக்கோட் டை பகுதிகளில் வாத்துக்கள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. தற்போது இப்பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் நடவு முடிந்துள்ளது. இதனால் வாத்துக்கள் அங்கிருந்து தேனி மாவட்டம் கம்பம், கூடலூர், உத்தமபாளையம், கோட்டூர், குச்சனூர் பகுதி வயல்களில் மேய்ச்சலுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. இப்பகுதியில் நடவு துவங்கியதும் வேறு பகுதியில் உள்ள வயல் வெளிகளுக்கு கொண்டு செல்லப்படும். தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் வாத்து முட்டைகள் கேரளாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது வாத்து முட்டை ஒன்று 5 ரூபாய்கு விற்கப்படுகிறது.தமிழக அணைகளின் நீர் இருப்பு திருப்திகரமாக

இருப்பதால் இந்த ஆண்டு வாத்து முட்டை உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.இவ்வாறு தெரிவித்தனர்.

**<u>ஏலக்காய் வரத்து அதிகரிப்பு; விலை கிடைக்காததால் ஏமாற்றம்</u>**

கம்பம் : ஏலக்காய் வரத்து திடீரென அதிகரித்துள்ளதால், உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் புலம்பி வருகின்றனர். சர்வதேச அளவில் இந்திய ஏலக்காய் தரத்தில் முதல் இடம் வகிக்கிறது. வளைகுடா நாடுகளில் இந்திய ஏலக்காய்க்கு நல்ல கிராக்கி உள்ளது.இந்தியாவில் ஏலக்காய் சாகுபடி 80 சதவீதம்கேரளாவில் உள்ளது.ஏலக்காய்க்கு விலை கிடைப்பதில் கடந்த 20 ஆண்டுகளாகவே தடங்கல் இருந்து வருகிறது. எப்போதாவது ஒரு முறை நல்ல விலை கிடைக்கும்.ஆனால் பெரும்பாலான சீசன்களில் விலை கிடைக்காது.இதனால் விவசாயிகள் தொடர்ந்து சிக்கலை சந்தித்து வருகின்றனர்.இந்த சீசனில் தற்போது ஏல மையம் (ஆக்ஷன் சென்டர் களுக்கு) வரத்து அதிகரித்துள்ளது. கடந்த வாரம் கே.சி.பி.எம்.சி., ஆக்ஷன் சென்டருக்கு ஒரு லட்சத்து 35 ஆயிரம் கிலோ விற்பனைக்கு வந்தது. "சொசைட்டி ஆக்ஷனுக்கு' ஒரு லட்சம் கிலோ வரை வந்தது. "சவுத் இண்டியன் கிரீன் கார்டமம் ஆக்ஷன் கம்பெனிக்கு' ஒரு லட்சம் கிலோ வரை வரத்து இருந்தது.பிற ஆக்ஷன் மையங்களுக்கு 60 ஆயிரம் முதல் 80 ஆயிரம் கிலோ வரை வரத்து இருந்தது.வரத்து அதிகரித்தாலும் விலை விஷயத்தில் திருப்திகரமான நிலை இல்லை.சராசரி விலை கிலோவிற்கு 750 ரூபாய் கிடைக்கிறது.8 எம்.எம்.,போல்ட் காய்கள் கிலோ ஆயிரத்திற்கு மேல் கிடைக்கிறது. கடந்த ஆண்டு காய் எடுப்பு ஜூன் மாதம் துவங்கி விட்டது.எனவே வரத்து குறைவாக இருந்தது. ஆனால் இந்த சீசனில் காய் எடுப்பு ஆகஸ்ட் மாதத்திற்கு தள்ளப்பட்டது. எனவே தற்போது வரத்து அதிகமாக உள்ளது. உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பரமக்குடி பகுதி விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி! வைகையில் 3 ஆண்டிற்கு பின் நீர் திறப்பு

பரமக்குடி : ராமநாதபுரம் மாவட்டத்திற்கு மூன்று ஆண்டுகளுக்குப் பின், வைகை ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால் பரமக்குடி விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர். குடிநீர் பிரச்னை முடிவுக்கு வரும் என்பதால் பொதுமக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். ராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு கடந்த 2011 நவம்பர் மாதம் வைகை அணை நீர் வந்தது. அதன்பின் 3 ஆண்டுகளாக பருவமழை இன்றியும், வைகை ஆற்றில் தண்ணீர் திறக்காமலும் விவசாய நிலங்கள் வறண்டன. குடிநீருக்கு வழியின்றி பொதுமக்கள் திண்டாடினர். முக்கியமாக பரமக்குடி, போகலூர், நயினார்கோவில் ஒன்றியங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பாசன நிலங்களில் கருவேல மரங்கள் வளர்ந்தன. பரமக்குடியில் 300 அடி ஆழம் வரை ஆழ்குழாய் அமைக்கும் நிலை உருவானது. குடிநீர் பிரச்னைக்காக, பல்வேறு பொதுநல அமைப்புகள், அரசியல் கட்சிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டன. இதன் விளைவாக கடந்தநவ., 21 ல், 3500 கனஅடி வீதம் வைகை ஆற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது. அணை நீர் 2 நாட்களுக்குப்பின் ராமநாதபுரம் மாவட்ட எல்லையான பார்த்திபனூர் மதகு அணைக்கு, நேற்று அதிகாலை 4:00 மணிக்கு வந்தடைந்தது. பொதுப் பணித்துறை அதிகாரிகள் காலை 6:15 மணிக்கு ராமநாதபுரம் பெரிய கண்மாய்க்கு, வைகை ஆற்றின் வழியாக 2000 கன அடி வீதமும், வலது, இடது பிரதான கால்வாய்கள் வழியாக தலா 500 கன அடி வீதமும் திறந்து விட்டனர். இதன் மூலம் வலது பிரதான கால்வாயில் இருந்து, ராமநாதபுரம் மாவட்டத்திற்கு, 43.2 கி.மீ., தூரம் கொண்ட, 30 பிரிவு கால்வாய்கள் மூலம், 154 கண்மாய்களுக்கு செல்லும் நீரால், 33 ஆயிரத்து 196 ஏக்கர் நிலங்களும், இடது பிரதான கால்வாயில் இருந்து, ராமநாதபுரம், சிவகங்கை மாவட்

டத்திற்கு, 45 கி.மீ., தூரம் கொண்ட 28 பிரிவு கால்வாய்கள் மூலம் 87 கண்மாய்களுக்கு செல்லும் நீரால் 34 ஆயிரத்து 982 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும். மேலும், இந்த வருடம் பருவமழை ஓரளவிற்கு கை கொடுத்துள்ள நிலையில், வைகை அணையில் தண்ணீர் திறக்கப்பட்டதால் நெல் விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர். பரமக்குடி நகராட்சி கிணறுகள் அனைத்தும் வற்றியுள்ள நிலையில், காவிரி நீரை மட்டுமே நம்பி இருந்த மக்கள் வீட்டு புழக்கம் மற்றும் குடிநீருக்கும் தீர்வு ஏற்பட்டுள்ளதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நாசிக்கில் வெங்காயம் ஏலம் தொடக்கம்</u>**



நாசிக்: மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் உள்ள லசால்கானில் வெங்காய ஏலம் நேற்று மீண்டும் தொடங்கியது. நாசிக் மாவட்ட வர்த்தகர் சங்கம், தன்னிடம் பதிவு செய்யாத உள்ளூர் வியாபாரிகளை ஏலத்தில் பங்கேற்க திடீரென தடை விதித்தது. இதனால், வெங்காய உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதன்பிறகு ஒரு வாரமாக ஏலம் நடைபெறவில்லை. நேற்று காலை மீண்டும் ஏலம் தொடங்கியது. இதில் ஒரு குவிண்டால் ரூ.1,776க்கு விற்கப்பட்டது.

## திருச்செந்துறையில் நாளை வாழைத்தார் பொது ஏலம்

திருச்சி, : திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் ஸ்ரீரங்கம் திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் நாளை நடக்கிறது. இந்த பொது ஏலம் மூலம் விவசாயிகள் நல்ல விலை பெறுவதோடு எந்தவித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. எனவே திருச்சி மாவட்டத்தில் அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் வட்டாரங்களில் வாழை சாகுபடி செய்து தற்போது அறுவடை செய்து கொண்டிருக்கும் வாழை விவசாயிகள் மட்டுமில்லாமல் டெல்டா மாவட்ட விவசாயிகளும் அறுவடை செய்துள்ள வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்துக்கு கொண்டுவந்து பொது ஏலத்தில் பங்கேற்று பயன்பெறலாம். மேலும் தரமான வாழைத்தார்களுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. எனவே இந்த பொது ஏலத்தில் வாழைத்தார்களை ஏலம் எடுக்க வியாபாரிகளும் கலந்து கொள்ளலாம்.

## மாவட்டத்தில் 25.50 மி.மீ. மழை பதிவு

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் நேற்று காலை வரை 25.50 மி.மீ மழை பதிவானது. திருச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்யவில்லை. இந்நிலையில் கடந்த 19ம் தேதி மாலையில் இருந்து மீண்டும் மழை பெய்து வருகிறது. இதில் திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 25.50 மி.மீ மழை பதிவானது. அதிகபட்சமாக பொன்மலையில் 5.20 மி.மீ மழை, குறைந்தபட்சமாக திருச்சி டவுனில் 2.20 மி.மீ மழை பதிவானது. சராசரியாக 1.02 மி.மீ மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் நேற்று காலை 8

மணி வரை பெய்த மழை அளவு (மி.மீட்டரில்): லால்குடி 3, புள்ளம்பாடி 4.20, திருச்சி ஏர் போர்ட் 2.90, நந்தியார் தலைப்பு 3, சமயபுரம் 5.

## <u>தர்ப்பூசணி, முருங்கை சாகுபடி பயிற்சி</u>

குஜிலியம்பாறை, : குஜிலியம்பாறை அருகே விவசாயிகளுக்கு தர்ப்பூசணி மற்றும் முருங்கை சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. குஜிலியம் பாறை அருகே கூம்பூர் மற்றும் ஆர்.புதுக்கோட்டையில் நபார்டு வங்கி, பூஜா அறக்கட்டளை மற்றும் ரிலையன்ஸ் பவுண்டேசன் சார்பில் பயிற்சி முகாம் நடந்தது. இதில் உயர்விளைச்சல், பூச்சி மேலாண்மை குறித்து காந்தி கிராம வேளாண் அறிவியல் மைய வல்லுநர் செந்தில்குமார் பயிற்சி அளித்தார். பாண்டிச்சேரியை சேர்ந்த முன்னோடி விவசாயி ராமலிங்கம், தர்ப்பூசணி சாகுபடியில் உயர்விளைச்சல் குறித்து ஆலோசனை வழங்கினார். இயற்கை விவசாயம், மண்புழு உரம் தயாரிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. ஆர்.புதுக்கோட்டை ஊராட்சிமன்ற தலைவர் பழனிச்சாமி, அறக்கட்டளை மேலாளர் மகேந்திரன், ரிலையன்ஸ் பவுண்டேசன் மேலாளர் முகில்நிலவன், கூம்பூர் உழவர் மன்ற தலைவர் பொன்னுச்சாமி, முன்னோடி விவசாயிகள் கோபால்சாமி, கிருஷ்ணசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## <u>வயல்களில் வலம் வரும் எலிகளை ஒழிப்பது எப்படி? வேளாண் அதிகாரிகள் ஆலோசனை</u>

பழநி, : வயல்களில் எலிகளின் அட்டகாசத்தை ஒழிப்பது எப்படி என்பது குறித்து வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர். இந்த வருடம் பருவ மழை கைகொடுத்த நிலையில், விவசாய நிலங்களில் பயிர்கள் நன்றாக வளர்ந்து வருகின்றன. விவசாயிகள் கடன் வாங்கி விளைவித்துள்ள இந்த பயிர்களை எலிகள் நாசம் செய்து வருகின்றன.

தானியங்களை உண்பதற்காக வயலில் வளை அமைத்து சுற்றி வரும் எலிகளால் விவசாயிகள் கடும் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். இவற்றை தடுக்கும் முறை குறித்து வேளாண் அதிகாரிகள் கூறியுள்ள ஆலோசனைகள் வருமாறு:

வயல்களில் பயிர் செய்ய ஆரம்பிக்கும் முன்னரும் பயிரில்லாத காலத்திலும் கூடுமானவரை எல்லா எலி வளைகளையும் தோண்டி அழிக்க வேண்டும். வரப்புகளின் ஓரங்களில் களை எடுத்து மண் அடைத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் எலிகள் வளைகளை அமைக்க இயலாது. உழும்போது ஆழமாக உழுவதன் மூலம் எலி வளைகளை உடைக்கலாம். குறுகிய வரப்புகள் அமைக்க வேண்டும். புதர்களை அழிக்க வேண்டும். வைக்கோல் போர்களை வயலுக்கு அருகில் அமைக்க கூடாது. ஆந்தைகள் போன்ற இரவு பறவைகள் அமர 'டி' வடிவ குச்சிகளை வயலில் நட வேண்டும். அதன் மூலம் எலிகளை இயற்கை முறையில் அழிக்கலாம். வெளிச்சமான விளக்கின் மூலம் ஓடாமல் நிற்கும் எலிகளை தடியால் அடித்து கொல்ல வேண்டும். எலிகளின் இயற்கை எதிரிகளான ஆந்தை மற்றும் பாம்பு போன்றவற்றை அழிக்காமல் இருக்க வேண்டும். மூங்கில் கிட்டிகளை 1 ஏக்கருக்கு 20 கிட்டிகள் வீதம் வைத்து எலிகளை பிடித்து அழிக்கலாம். வாயகன்ற பானைகளில் சாணம் கலந்த நீரை நிரப்பி, மேற்பரப்பில் சோறு போட்டு வைத்தால் அவற்றை உண்ண வரும் எலிகள் அந்த சாண நீரில் மூழ்கி இறந்துவிடும். ஏ.எல்.பி போன்ற விஷ மாத்திரைகளை வளைக்கு ஒன்று வீதம் போட்டு ஈரமண் போட்டு மூட வேண்டும். துத்தநாக பாஸ்பைடு விஷ உணவு தயாரித்து வைத்து எலிகளை அழிக்கலாம். ஆண்ட்டி கொயாகுலண்ட் கலவை தயாரித்து வைத்து எலிகளை அழிக்கலாம். ப்ரோமோடையலான் மருந்து கொண்ட முஷ்-முஷ் என்ற உணவு கட்டியை ஏக்கருக்கு 20 என்ற எண்ணிக்கையில் வைத்து எலிகளை அழிக்கலாம். இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

## வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகளுக்கு மா சாகுபடி கண்காணிப்பு பயிற்சி

கிருஷ்ணகிரி, : கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகளுக்கு மா சாகுபடி மற்றும் பூச்சி நோய் கண்காணிப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கோவை வேளாண்மை பல்கலைக்கழக இறுதி ஆண்டு ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் பயிலும் 26 மாணவிகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 9 நாட்கள் கிராமங் களில் தங்கி மா சாகுபடி, மாவில் ஊடுபயிர் சாகுபடி, மாவில் பூச்சி நோய் கண்காணிப்பு சம்பந்தமான உயர் தொழில் நுட்பப்பயிற்சி அளிக்கப் படுகிறது. இப்பயிற்சியினை மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) பச்சையப்பன் அளித்து வருகிறார். இந்த பயிற்சியில் மாவட்டத்தில் பிரதான பயிராக சாகுபடி செய்யும் மானாவாரி மா சாகுபடி தொழில்நுட்பங்கள், மா சாகுபடிக்கு தேவையான நீர் மேலாண்மை, சொட்டு நீர் பாசனம் பயன்படுத்தும் முறைகள், மாவில் ஊடு பயிர் சாகுபடி குறிப்பாக கொள்ளு பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள், பூச்சி நோய் தாக்குதல், அதனை சுற்றுச்சூழல் பாதிக்காதவாறு இயற்கை வழி பூச்சி கொள்ளிகளை பயன்படுத்துவது போன்ற தொழில்நுட்பங்களையும், மா மரங்களில் தேவையற்ற மரக்கிளைகளை பயன்படுத்தி ஆற்றல் உற்பத்தி செய்வது போன்றவை குறித்து பயிற்சி அளித்து வருகிறார். இந்த பயிற்சியின் முக்கிய அங்கமாக இடைபடு காடுகளில் மரங்கள் வளர்த்தல், அம்மரங்களின் மூலமாக எரிசக்தி உற்பத்தி செய்தல் குறித்த பயிற்சி வழங்கப்படுகிறது. இது குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் கூறுகையில், இம்மாவட் டத்தில் சுமார் 41 ஆயிரம் எக்டரில் மா சாகுபடியும், 16 ஆயிரம் எக்டரில் தென்னை சாகுபடியும், இதர பயிர்கள் ஒரு லட்சம் 50 ஆயிரம் எக்டரிலும் பயிரிடப்பட்டு வருகிறது. இதன் மூலம் பெறப்படும் கழிவு, தேவையற்ற மரப்பாகங்கள் ஆற்றல் மற்றும் உரிசக்தி உருவாக்க ஏதுவாக உள்ளது

குறித்து இப்பயிற்சியில் தெரிவிக்கப்பட்டு வருகிறது. தென்னை மட்டைகள், உரிமட்டைகள் மற்றும் மாவின் தேவையற்ற கிளைகள் கொண்டு எரிசக்தி தயாரிப்பது இப்பயிற்சியின் முக்கிய அங்கமாகும். மேலும் மா மற்றும் இதர வேளாண்மை, தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியில் மாசு கட்டுப்பாடு சம்பந்தமாகவும், இயற்கை சூழலில் வளமான பயிர்களை மாசற்ற வகையில் தயாரித்தல், ரசாயன, விஷப்பூச்சி கொல்லி மருந்துகளை பயன்படுத்தாமல் இயற்கை வழி பூச்சி கொல்லிகளை குறிப்பாக பூச்சி விரட்டியான பஞ்சகாவ்யம், வேப்பம் கொட்டை சாறு போன்றவற்றை பயன்படுத்துவது குறித்து வேளாண் பல்கலைக்கழக மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## <u>நாகை மாவட்டத்தில் கனமழை மயிலாடுதுறையில் 48 மி.மீட்டர்</u>

நாகை,: நாகை மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை முதல் விட்டு விட்டு மழை பெய்தது. பின்னர் மாலை வலுவடைந்த மழை விடிய விடிய கொட்டித் தீர்த்தது. இந்த கனமழையால் நாகை பஸ் ஸ்டாண்ட் மற்றும் முக்கிய சாலைகள், தாழ்வான இடங்களில் தண்ணீர் தேங்கி நின்றது. இதையடுத்து பஸ் நிலையம் உள்ளிட்ட இடங்களில் மழை நீரை நகராட்சி பணியாளர்கள் மோட்டார் மூலம் வெளியேற்றினர். நேற்று காலை முதல் மழை இல்லை. வானம் மேகமூட்டத்துடன் இருந்தது. மாவட்டத்தில் பெய்த மழையளவு (மி.மீ) நாகை 35.9, கொள்ளிடம் 5, மணல்மேடு 15, மயிலாடுதுறை 48, தரங்கம்பாடி 6, சீர்காழி 31, தலைஞாயிறு 0.8, திருப்பூண்டி 15.4, வேதாரண்யம் 0.8.என பதிவானது. சராசரி 17.54 மி.மீ.. மாவட்டத்தில் அதிகபட்சமாக மயிலாடுதுறையில் 48 மி.மீட்டரும், குறைந்தபட்சமாக தலைஞாயிறு மற்றும் வேதாரண்யத்தில் 0.8 மி.மீ. பதிவாகி இருந்தது.

## கோம்பை பகுதியில் சிறு தானியங்கள் விதைப்பில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

தேவாரம், : கோம்பை பகுதிகளில் சிறுதானியங்கள் விதைப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் அதிகமான ஏக்கர் பரப்பில் விவசாய நிலங்கள் உள்ளன. வடகிழக்கு பருவமழை காரணமாகவும், 18ம் கால்வாயில் திறக்கப்பட்ட தண்ணீரினாலும் அதிகளவில் விவசாய கிணறுகளுக்கு தண்ணீர் ஊற்று ஏற்பட்டு வருகிறது. தொடர்ந்து கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் நிரம்பாமல் உள்ள கண்மாய்களுக்கும் தண்ணீர் வரத்து ஏற்பட்டுள்ளது. இதனால் இனிவரும் காலங்களில் சிறுதானியங் களை அதிகளவில் பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டுவர். குறிப்பாக சோளம், கம்பு, கேப்பை, எள், உள்ளிட்ட பயிர்களை விதைக்க விவசாயிகள் நிலங்களை உழுதுள்ளனர். சில நூறு ஏக்கரில் விதைத்துள்ள செடிகளை பராமரித்தும் வருகின்றனர். இயற்கையில் மழை தந்த மாற்றம் மானாவாரி விவசாயிகளை அதிகளவில் விவசாயத்தில் ஈடுபட வைத்துள்ளது. தொடர்ந்து மழைநீடித்து குளங்கள் அனைத்தும் நிரம்பும்போது சிறுதானியங்கள் விதைப்பு அதிகரிக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், தேவாரம் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயரும்போது மானாவாரி விவசாயம் மட்டும் அல்லாமல் சிறுதானியங்கள் விதைப்பும் அதிகரிக்கும். இதற்காக விதைக்காத நிலங்களை சமப்படுத்தி இதனை விதைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். மழை அதிகரிக்கும்போது விவசாயம் செய்யும் பரப்பும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றனர்.

## விவசாயிகளுக்கு சிறுதானிய விதை நேர்த்தி பயிற்சி

தேவதானப்பட்டி, : தேவதானப்பட்டி அருகே சில்வார்பட்டியில் விவசாயிகளுக்கு சிறுதானிய விதை நேர்த்தி பயிற்சி அளிக்கப்பட்டது. நடப்பாண்டில் பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் மாவட்டத்தில் உள்ள நன்செய், புன்செய், மானாவாரி ஆகிய நிலங்களில் விவசாய பணிகளை மேற்கொள்ள விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது சிறுதானிய பயிர்கள் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. சிறுதானிய பயிர்களில் இருந்து எப்படி விதை நேர்த்தி செய்வது என்ற பயிற்சி சில்வார்பட்டி விவசாயிகளுக்கு, சிறுதானியம் விதை கிராமத்திட்டம் மூலம் அளிக்கப்பட்டது. சில்வார்பட்டி சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற விதை நேர்த்தி பயிற்சிக்கு பெரியகுளம் வேளாண்மை உதவி இயக்குனர் பெரியகருப்பன் தலைமை வகித்தார். சில்வார்பட்டி விவசாயிகள் நலச்சங்க செயலாளர் முத்துக்காமாட்சி முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் ரத்தினசிவா வரவேற்றார். பயிற்சியில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். விதைச்சான்று அலுவலர் ராஜகுரு, மக்காசோளம், சோளம், கம்பு, போன்ற சிறுதானிய பயிர்கள் விதை நேர்த்தி பயிற்சியினை நடத்தினார். ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர்கள் கண்ணன், ராமன், ரேணுகா, சுரேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.

## 142 தந்த உற்சாகம் நெல் விவசாயத்தில் விவசாயிகள் ஆர்வம் உழவுப்பணி தீவிரம்

கம்பம், : பெரியாறு அணையில் 142 அடி தந்த உற்சாகத்தால் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் நெல் விவசாயத்தில் ஆர்வம் காட்டி

வருகின்றனர். கம்பம் பள்ளத்தாக்கில் கம்பம், அனுமந்தன்பட்டி, காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி உள்ளிட்ட ஊர்களில் முதல்போக நெல்விவசாய அறுவடை முடிந்துள்ளது. இதனால் விவசாய தொழிலாளர் களுக்கு வேலை கிடைத்துள்ளது. தற்போது முல்லைபெரியாறு அணையின் நீர்மட்டம் 142 அடியாக உயர்த்தப்பட்டதால் விவசாயிகள் சந்தோஷமாக அடுத்த கட்ட நெல்சாகுபடிக்கு தயாராகிவிட்டனர். கம்பம் பகுதியில் எல்லா வயல்களிலும் நாற்றாங்கால் பாவப்பட்டுள்ளது. இன்னும் சில நாட்களில் நெல்நடவு தொடங்க உள்ளது. விவசாய நெல் வயல்களில் உழுவது, நிலத்தை சமப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். சில இடங்களில் நடவுபணிகள் தொடங்கி உள்ளன. விவசாயிகள் கூறுகையில், முல்லைப்பெரியாறு அணையில் 142 அடி தண்ணீர் தேக்கப்பட்டது விவசாயத்தில் மேலும் ஆர்வத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் அடுத்த போகத்திற்கு தயாராகி வருகிறோம். எங்களுக்கு மட்டும் அல்லாமல் கூலி தொழிலாளர்களுக்கும் மகிழ்ச்சியாக உள்ளது என்றனர்.

## பறக்கையில் மீன் உபபொருட்கள் தயாரிப்பு பயிற்சி முகாம்

நாகர்கோவில், : கன்னியாகுமரி மாவட்ட பற க்கை மீன்வளப் பயிற்சி மற் றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலை வர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: பறக்கையிலுள்ள மீன் வள ஆராய்ச்சி மையத்தில் மீன்வளம் சம்பந்தப்பட்ட இலவச பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. தற் போது மீன் உபபொருட்கள் தயாரிப்பு என்ற தலைப்பில் பயிற்சி முகாம் நாளை (25ம்தேதி) முதல் 27ம் வரை வரை நடைபெறவுள்ளது. இம்முகாமில் மீனிலிருந்து மீன் உபபொருட்களாகிய மீன் ஊறுகாய், மீன் வடகம், மீன் கட்லெட், மீன் பஜ்ஜி போன்றவை தயாரித் தல் பற்றி விரிவாக பாடம் நடத்தப்படும். இம்முகாமில் சுய உதவிக்குழுக்கள், மீன் சார் தொழில்

முனைவோர், மீனவர்கள், மீனவ பெண் கள் மற்றும் ஆராய்ச்சியாளர் கலந்து கொண்டு பயன்பெறலாம். சுயதொழில் தொட ங்குவதற்கும், மதிப்பூட்டிய மீன் உபபொருட்கள் பற்றி தெரிந்து கொள்வதற்கும் இப்பயிற்சி மிகவும் உதவி யாக இருக்கும். இம்முகாமில் கலந்து கொள்ள அணுக வேண்டிய முகவரி மற்றும் இது குறித்த தகவலை அறிய: பேராசிரியர் மற்றும் தலைவர் மீன்வளப்பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் பறக்கை, தொலைபேசி எண் 04652-286107.

**பயிர்களை காப்பீடு செய்யும் தேதியை டிசம்பர் 31 வரை நீட்டிக்க வேண்டும்**

புதுக்கோட்டை, : தேசிய வேளாண் திட்டத்தில் பயிர்களை காப்பீடு செய்வதற்கான தேதியை டிசம்பர் 31 வரை நீட்டிக்க வேண்டும் என்று புதுக்கோட்டையில் நேற்று நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. கலெக்டர் கணேஷ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளாகக் கலந்துகொண்ட விவசாயிகள் தங்கள் பகுதியில் நிலவும் குறைகளை சுட்டிக்காட்டி உரிய நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்திப் பேசினர். மாதவன்: மாவட்டத்தில் உள்ள வரத்து வாரிகளை தூர் வார வேண்டும் என்று பலமுறை கோரிக்கை விடுத்து வருகின்றோம். இதுவரை மாவட்டத்தில் எத்தனை குளங்கள், வரத்து வாரிகள் தூர் வாரப்பட்டுள்ளது என குறிப்பிட்டு கூற முடியுமா? கால் நடைகளுக்கு தேவையான தாதுஉப்புகள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று சென்ற கூட்டத்தில் கேட்டற்கு இதுவரை எந்த பதிலும் அதிகாரிகள் வழஙகவில்லை. எனவே தாது உப்பு கிடைக்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல், ஆலங்குடியில் மின் வாரிய புதிய கோட்டம் அமைக்க நடவடிக்கை

எடுக்க வேண்டும், வேளாண் வரிவாக்க மையங்களில் சூடோமோனாஸ் மருந்துகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தனபதி: மாவட்டத்தில் உள்ள அனைத்து குளக்கரைகளிலும் மரக் கன்றுகள் நட்டு பராமரிக்க வேண்டும். விவசாயிகள் பயிர் காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி முடிவடைந்துள்ளதை டிசம்பர் 31ம் தேதி வரை நீட்டிக்க வேண்டும். சோமையா: விவசாயிகளுக்கு பயிர் கடன் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், அன்னவாசல் பகுதியில் குரங்குளை பிடிக்க வனத் துறை மூலம் நடிவடிக்கை எடுக்க வேண் டும். இங்குள்ள டாஸ்மாக் கடையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும். நாகையா: பி.அழகாபுரியில் அரசு மேல்நிலைப் பள்ளி பகுதி அருகேயுள்ள டாஸ்மாக் கடையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று பல முறை வலியுறுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. குடிமகன்களின் தொல்லையால் 2 கி.மீ. சுற்றித்தான் மாண விகள் பள்ளிக்கு வரும் நிலை தொடர்கிறது. எனவே, டாஸ்மாக் கடையை உடனடியாக வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும. கோவிந்தராஜ்: தஞ்சாவூரில் இருந்து கந்தர்வக்கோட்டைக்கு வரும் நகர பேருந்து பல்வேறு ஊர்களுக்களுக்கு சென்று வருவதால் பள்ளிக்கு குறித்த நேரத்தில் மாணவ, மாணவிகள் செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே, கந்தர்வக்கோட்டையில் இருந்து தஞ்சாவூருக்கு நேரடியாக குறித்த நேரத்தில் செல்லும் வகையில் ஒரு நகர பேருந்தை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், முருகேசன்: குடுமியான்மலையில் இருந்து பரம்பூர் வழியாக இலுப்பூருக்கு பஸ் வசதி ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். மேலும் தற்போது புதுக்கோட்டையில் இருந்து பரம்பூர் வழியாக இலுப்பூருக்கு 3 முறை பஸ்கள் இயக்கப்படுகின்றன. இதை இன்னும் 3 முறை கூடுதலாக இயக்க வேண்டும். அருணோதயன்: வேளாண் விரிவாக்க மையங்களில் சிப்சம், சூடோமோனோஸ், சிறுதானிகள் கிடைப்பது என்பது மிக அரியதாக இருக்கிறது, ஆனால் அது தனியாரிடம் அளவுக்கு அதிமாக உள்ளது.

கிராமங்களில் உள்ள குளங்கள் அனைத்தும் வீட்டு மனைகளாக மாறுவதை தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். சின்னசூரியூரில் இயங்கி வரும் தனியார் கூல்டிரிங்ஸ் நிறுவனத்துக்கு தேவையான குடிநீர் லட்சக்கணக்கான லிட்டர் அளவில் ஆழ்குழாய் மூலம் உறிஞ்சப்பட்டு வருகிறது. இதனால் அப்பகுதியில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது. இதைத் தடுத்துநிறுத்த உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**<u>கூடுதல் உரம் போட்டால் பயிரில் பசுமை கூடி பூச்சி நோய் தாக்கும் ஏக்கருக்கு 20 கிலோ யூரியா நெல் விவசாயிகளுக்கு எச்சரிக்கை</u>**

பள்ளிபாளையம், : நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் இரண்டாவது மேல் உரமாக ஏக்கருக்கு 20 கிலோ யூரியா பயன்படுத்தினால் போதும். கூடுதல் உரமிட்டால் பயிரில் பசுமை கூடி பூச்சி நோய் தாக்குதல் ஏற்படும் என வேளாண்மைத்துறை எச்சரித்துள்ளது. நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் வேளா ண்மை அலுவலகத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பண்ணை குழுவினரின் தகவல் மற்றும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பண்ணை திட்டத்தில் ஆர்வலர்களாக உள்ள 15 வேளாண்மை உறுப்பினர்கள் கலந்து கொண் டனர். பள்ளிபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் அசோக் தலை மை வகித்தார். கூட்டத்தில் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன், வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் செல்வம், மற்றும் பட்டு வளர்ச்சித் துறையினர் பங்கேற்று பேசியதாவது: பள்ளிபாளையம் வட்டாரத்தில், தற்போது 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. நெல் பயிருக்கு இரண்டாம் மேலுரமாக ஏக்கருக்கு 20 கிலோ யூரியா மட்டும் போட வேண்டும். இதற்கும் மேல் யூரியா போட்டால், பயிரில் அதிக பசுமை ஏற்பட்டு இலைசுருட்டு புழு

தாக்குதல் ஏற்படும் என அதிகாரிகள் எச்சரிக்கை தெரிவித்தனர். கிணற்று பாசன விவசாயிகள் கார்த்திகை பட்டத்தில் எள், நிலக்கடலை பயிரிட்டு நல்ல மகசூலை பெறலா மென விவசாயிகளுக்கு அதிகாரிகள் ஆலோசனை வழங்கினர்.

**ஒரு மாதமாக குறையவில்லை அமராவதி அணையில் 86 அடி நீர்மட்டம்**

உடுமலை, : அமராவதி அணையில் கடந்த ஒரு மாதமாக தொடர்ந்து 86 அடி நீர்மட்டம் இருந்து வருகிறது. இதனால் வரும் கோடைகாலத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது. திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள அமராவதி அணையின் மூலம் கோவை, திருப்பூர் மாவட்டத்தில் 54 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. அது போல 8க்கும் மேற்பட்ட கூட்டு குடிநீர் திட்டத்திற்கும், நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங் களின் குடிநீர் தேவையையும் பூர்த்தி செய்து வருகிறது. வடகிழக்கு பருவமழை பெய்து வருவதையொட்டி அமராவதி அணையின் நீர் பிடிப்பு பகுதிகளான பாம்பாறு, தேனாறு, கூட்டாறு, சின்னாறு போன்றவற்றில் பெருக்கெடுத்த வெள்ளம் அணையின் நீர்மட்டத்தை கிடுகிடுவென உயர்த்தியது. கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு பிறகு நல்ல மழை பெய்ததால் பாசனப்பகுதிகளுக்கு தண்ணீர் தேவைப்படாததால் அணையின் நீர்மட்டம் 86 அடியாக நிலை நிறுத்தப்பட்டது. அணையின் பாதுகாப்பு கருதி உபரிநீர் மட்டும் கடந்த மாதத்தில் இரு முறை வெளியேற்றப்பட்டது. இந்நிலையில் தற்போது பாசனத்திற்காக ஆற்றில் வினாடிக்கு 250 கனஅடியும், அமராவதி பிரதான கால்வாயில் வினாடிக்கு 250 கன அடியும், கல்லாபுரம், ராமகுளம் வாய்க்காலில் தலா 25 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. தொடர் மழை காரணமாக கடந்த ஒரு மாத காலமாக அணையின் நீர்மட்டம் 86 கன அடியாக நீடித்து வருகிறது. இது விவசாயிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதே நீர்மட்டம் தொடருமானால்

கோடை காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது என உடுமலை சுற்றுவட்டார பொதுமக்கள் தெரிவித்தனர். வழக்கமாக ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாடு இந்த ஆண்டு ஏற்படாதிருக்கும் என்ற தகவலால் உள்ளாட்சி பிரதிநிதிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>அதலைக்காய் வரத்து அதிகரிப்பு கிலோ ரூ.15க்கு விற்பனை</u>**

மதுரை, : சீசன் துவங்கி இருப்பதால் அதலைக்காய் வரத்து அதிகரித்து, கிலோ ரூ.15க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதலைக்காய் சர்க்கரை நோய்க்கு நல்ல மருந்தாகும். மதுரை மாட்டுத்தாவணி சென்ட்ரல் மார்க்கெட்டில் காய்கறிகளின் நேற்றைய விலை நிலவரம் (ரூபாய், கிலோவில். அடைப்புக்குள் பழைய விலை):

கத்தரிக்காய் - ரூ.30 (ரூ.40)

அதலைக்காய் - ரூ.15

பச்சைப் பட்டாணி ரூ.150

மொச்சை ரூ.40

தக்காளி (உருட்டு)- ரூ.15

தக்காளி (நாடு) ரூ.20 (ரூ.17)

வெண்டைக்காய் - ரூ.15

பீர்க்கங்காய் - ரூ.20 (ரூ.30)

புடலங்காய்-ரூ.20

பெரிய பாகற்காய்- ரூ.20

சுரைக்காய்-ரூ.10

வெள்ளை பூசணி-ரூ.6

சர்க்கரை பூசணி-ரூ.5

கொத்தவரங்காய்-ரூ.10

அவரைக்காய்-ரூ.30

மிளகாய் (நாடு)-ரூ.25

மிளகாய் (ஆந்திரா) ரூ.15

குடை மிளகாய்-ரூ.40

பஜ்ஜி மிளகாய்- ரூ.50

முள்ளங்கி-ரூ.25

முருங்கைக்காய்-ரூ.50

கொத்தமல்லி-ரூ.80

புதினா (ஒரு கட்டு)-ரூ.20

கருவேப்பிலை-ரூ.25

சேனைக்கிழங்கு-ரூ.25

சேம்பு-ரூ.35

கருணைக்கிழங்கு-ரூ.40

பல்லாரி (பழையது) - ரூ.20 முதல் ரூ.25

சின்ன வெங்காயம் (புதியது) - ரூ.30 முதல் 45

சின்ன வெங்காயம் (பழையது) - ரூ.45

உருளைக்கிழங்கு (கொடைக்கானல்)-ரூ.35

கேரட்-ரூ.20

பீட்ரூட்-ரூ.25

பீன்ஸ்-ரூ.30 (ரூ.35)

பட்டர் பீன்ஸ்-ரூ.70

சோயா பீன்ஸ்-ரூ.50

முட்டைக்கோஸ்-ரூ.12 (ரூ.20)

காலி பிளவர்-ரூ.15 முதல் ரூ.20

நூக்கல்-ரூ.20

டர்னிப்-ரூ.20

சவ்சவ்-ரூ.15 (ரூ.18)

இஞ்சி (புதியது)- ரூ.50 (ரூ.60)

மதுரை சென்ட்ரல் மார்க்கெட் அனைத்து வியாபாரிகள் சங்கத் தலைவர் ரவிச்சந்திரன் கூறுகையில், 'கார்த்திகை மாதம் அதலைக்காய் சீசன் துவங்கும். அதனால் மார்க்கெட்டுக்கு அதலைக்காய் வரத்து அதிகரித்துள்ளதால் கிலோ ரூ.15க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதலைக்காய், சர்க்கரை நோய்க்கு அருமருந்தாக பயன்படுகிறது. அதலைக்காய் சாப்பிடுவதால் சர்க்கரை நோய் வராது. இதனால் அதலைக்காயை மார்க்கெட்டில் விரும்பி வாங்கிச்செல்வர். அருப்புக்கோட்டை, சாத்தூர், ஆண்டிப்பட்டி போன்ற பகுதிகளில் இருந்து அதலைக்காய் அதிகளவில் மார்க்கெட்டுக்கு வருகிறது என்றார்.

**<u>அலங்காநல்லூர் பகுதியில் அறுவடைக்கு தயாரான செவ்வந்தி பூக்கள்</u>**

அலங்காநல்லூர், : அலங்காநல்லூர் பகுதியில் செவ்வந்தி பூக்கள் விளைந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. மதுரை அருகே அலங்காநல்லூர் பகுதியில் மல்லிகை, முல்லை, ரோஜா, மரிக்கொழுந்து, சம்மங்கி, செவ்வந்தி உள்ளிட்ட பலவகை பூக்கள் விளைவிக்கப்படுகிறது. தற்போது செவ்வந்தி பூக்கள் விளைந்து அறுவடை தொடங்கியுள்ளது. விவசாயிகள் அ.கோவில்பட்டி சக்தி (23), இடையபட்டி முருகன் (37) ஆகியோர் கூறியதாவது:

இப்பகுதியில் செவ்வந்தி பூச்செடிகள் கடந்த ஆடி மாதம் நடவு செய்யப்பட்டது. தொடர்ந்து தேவையான மருந்துகள், உரங்கள் இடப்பட்டு, செடிகள் பராமரிக்கப்பட்டு வந்தது. தொடர் மழையால் இந்த செடிகள் தற்போது பூக்க தொடங்கிவிட்டன. அறுவடையும் துவங்கி நடந்து வருகிறது. ஒரு கிலோ ரு.70 லிருந்து ரு.80க்கு விற்கப்படுகிறது. திருவிழா,

முகூர்த்த நாட்களில் செவ்வந்தி பூக்கள் கிலோ ரு.100 வரை மதுரை மார்க்கெட்டில் விற்பனையாகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் அமைச்சர் பூனாட்சி வழங்கினார்**



உப்பிலியபுரத்தை அடுத்த சோபனபுரத்தில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா நடைபெற்றது. அமைச்சர் பூனாட்சி தலைமை தாங்கி 140 பயனாளிகளுக்கு ரூ 17 லட்சத்து 92 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா ஆடுகளை வழங்கினார். இந்திராகாந்தி எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் மோகனரங்கன் வரவேற்றார். விழாவில் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், சேனை செல்வம், பேரூராட்சி தலைவர் மைவிழி அன்பரசு, ஒன்றிய குழு தலைவர் லலிதா செல்லமுத்து, ஊராட்சி தலைவர் திருப்பதி, மாவட்ட கவுன்சிலர் ஆனந்தி கணேசன், தொகுதி இணை செயலாளர் மனோகரன், பேரூராட்சி செயலாளர் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கால்நடை உதவி இயக்குனர் ராஜசேகர் நன்றி கூறினார்.

## குஜராத் மாநிலத்தில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 3,074 டன் உரம் விழுப்புரத்திற்கு வந்தது

குஜராத் மாநிலத்தில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 3,074 டன் உரம் விழுப்புரத்திற்கு வந்தது. உர மூட்டைகள் வந்தது தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்து பல்வேறு மாவட்டங் களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் அணை கள், ஏரிகள், குளங்கள் வேக மாக நிரம்பி வருகின்றன. இதை பயன்படுத்தி விவசாயிகள் வேளாண் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். வேளாண்மைக்கு தேவைப் படும் இடுபொருளான உரங்களை தமிழக அரசு, பல்வேறு மாவட்டங்களி லிருந்தும் வெளிமாநிலங்களி லிருந்தும் கொள்முதல் செய்து விவசாயத்திற்கு பற் றாக்குறை ஏற்படாத வகை யில் விவசாயிகளுக்கு வழங் கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தமிழ்நாடு அரசு கூட்டுறவு விற்பனை இணையம் விழுப்புரம் மண்டலத்தின் மூலமாக குஜராத் மாநிலம் சூரத்தி லிருந்து 3,074 டன் எடை கொண்ட கிரிப்கோ யூரியா உர மூட்டைகள் கொள்முதல் செய்து அவை 58 பெட்டிகள் கொண்ட சரக்கு ரெயில் மூலம் விழுப்புரம் அருகே உள்ள முண்டியம்பாக்கம் சரக்கு ரெயில் நிலையத்திற்கு நேற்று காலை வந்தது. இந்த உர மூட்டைகளை சரக்கு ரெயிலில் இருந்து சுமை தூக்கும் தொழிலாளர்கள் மூலம் லாரிகளில் ஏற்றப்பட்டு விழுப்புரம், திருவண்ணா மலை, கடலூர், பெரம்பலூர், அரியலூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.